செய்தி வெளியீடு எண்: 459 நாள் : 26.08.2013

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் நல திட்டங்களையும் ஊடகங்கள் வாயிலாக மக்களிடம் கொண்டு சேர்ப்பது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் தலையாய கடமையாகும்.**

**அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேச்சு.**

---

அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (26.08.2013) சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களையும் ஊடகங்களின் வாயிலாக மக்களிடம் கொண்டு சேர்ப்பது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் தலையாய கடமையாகும் என அமைச்சர் கூறினார்.

இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி பேசும் போது கூறியதாவது.

தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது. அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற செய்தித் துறையின் பணி மகத்தான பணியாகும். முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3வது முறையாக முதலமைச்சர் பதவி ஏற்றுக் கொண்டு இரண்டாண்டுகள் முடிவடைந்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்ற அம்மாவினுடைய அரசு அடித்தட்டு, ஏழை எளிய மக்கள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் எண்ணிலடங்கா பல திட்டங்களைத் தந்து நிறைவேற்றியுள்ளது அம்மாவினுடைய சாதனைத் திட்டங்களை சரித்திரமாக்கும் பணியாக நமது பணிகள் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள அனைத்து திட்டங்களும் மக்கள் போற்றுகின்ற திட்டமாக உள்ளது. இதனை முறையாக செய்தித்தாள்கள் மூலமும், ஊடகங்கள் மூலமும் மக்களுக்கு கொண்டு செல்வது தான் செய்தித் துறை அலுவலர்களின் முக்கியமான பணியாகும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்தியாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அரசின் செய்திகள் மக்களுக்கு சென்றடைய ஏதுவாக இருக்கும். மேலும் அதிகமான செய்திகளை பத்திரிகைகளில் வெளிவர செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அம்மாவின் ஆட்சி ஏழை எளிய மக்களின் ஆட்சி. அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்படுகின்ற ஆட்சி. ஆட்சியின் பெருமைகளையும் சாதனைகளையும் மக்களுக்கு முறையாகவும் விரைவாகவும் கொண்டு சேர்க்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வரும் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சிகளில் அரசின் அனைத்து துறைகளின் அன்றாட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த செய்திகள் உடனுக்குடன் வெளிவர ஏற்பாடு செய்யவேண்டும். மாநிலம் முழுவதும் நாட்டு நலனுக்காக பாடுபட்ட தேசியத் தலைவர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகள், தமிழறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைவர்களுக்கு நினைவகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அவைகளை பார்வையிட வரும் பொதுமக்களுக்கு உரிய தகவல்களை வழங்க முறையாக ஏற்பாடு செய்வதுடன் நினைவகம் தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் அரும்பணிகளையும் மக்கள் மத்தியில் எடுத்துக் கூற வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் பல்வேறு புதிய திட்டங்களை தலைமையிடத்திலிருந்து உடனுக்குடன் பதிவு செய்து குறுந்தகடுகளாக அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. அவைகளை மாவட்டங்களில் இயங்கி வரும் உள்ளூர் தொலைக்காட்சிகளில் தினந்தோறும் குறைந்த பட்சம் இரண்டு முறையாவது வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரையரங்குகளில் அரசு செய்திப்படம் முறையாக காண்பிக்கப்படுகிறதா என்பதை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலகர்களின் பணி பிற துறைகளின் பணிகள் போல் அல்ல. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடைய பணியின் உழைப்பு அரசின் மீது மக்கள் கொண்டுள்ள நல்லெண்ணத்தை வலுப்படுத்தும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் இதய சுத்தியோடும், கடமை உணர்வோடும் பணியாற்றிட வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அவர்களது பணியை சிறப்பாக செய்து வருவது பாராட்டுதலுக்குரியது. நாம் எவ்வளவு தான் சிறப்பாகப் பணியாற்றினாலும், அதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லை அல்லது வரையறை இல்லை என்பதால் நாம் இன்னும் எந்த அளவிற்கு கூடுதலாக கவனம் செலுத்தி ஆக்கபூர்வமாக செயல்படுகிறோமோ அந்த அளவிற்கு அரசின் திட்டங்கள் மக்களை சென்றடையும். இந்த பணி ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அலுவலர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் அவர்கள் பேசினார்.

முடிவில் செய்தித் துறையின் இணை இயக்குநர் (செய்தி) திரு எஸ்.பி. எழிலழகன் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**